23rd October 1964]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆசிரியர்-மாணவர் விகிதாசாரத்தை மாற்றியமைத்தபிறகு, அதனாலே பைனான்ஷியல் கமிட்மெண்ட் அதிகமாகி இருக்கிறது. இத்தனை ஆசிரியர்களுக்கு இடமுண்டு என்று திட்டத்திலே குறிப்பிட்டு அதற்காக பணம் ஒதுக்குகிறோம். ஆனால், பஞ்சாயத்து யூனியன்கள் வேறு தகவல் இல்லாமலே ஆசிரியர்களை நியமித்துக்கொண்டேபோனால் எவ்வளவு ஆசிரியர்களுக்கு இடம் போட்டிருக்கிறோமோ அதைவிட அதிகமாகலாம். அதனால்தான் கல்வி இலாகாவுக்கு பொறுப்புக் கொடுத்து, கல்வி இலாகாவின் அங்கீகாரத்தின்பேரில் நியமிக்க வேண்டுமென்று இப்பொழுது உத்திரவு போடப்பட்டிருக்கிறது.

ராஜா பெர்டிலைசர்ஸ், வேலூர்

* 69 கேள்வி.—**திரு. ர. ஜீவரத்னம் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் ராஜா பெர்டிலைசர்ஸ் ஸ்தாபனத்துக்கு மொத்தம் எவ்வளவு தொகை கடன் அளிக்கப்பட்டிருக்கிறது ?

(இ) எவ்வளவு தொகை இதுவரை வசூலிக்கப்பட்டிருக்கிறது?

(உ) இப்போது அந்த ஸ்தாபனம் நடைபெற்று வருகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) வேலூர் ராஜா பெர்டிலைசர்ஸ் ஸ்தாபனத்துக்கு கடன் ஏதும் அளிக்கப்படவில்லை.

(இ) எழாது.

(உ) இல்லை.

Compensation for lands acquired

* 70 *Q.*—SRIMATHI A. KRISHNAVENI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that no compensation has so far been paid to the Harijans whose lands have been acquired for the Bhojaraj Mills, to be started near Theni, Madurai district; and

(*b*) if so, when the amounts will be distributed?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) All the records relating to the acquisition of the lands in question had to be filed in the High Court in connection with writ petitions filed by certain pattadars and in the absence of the records, the awards for compensation could not be passed by the Land Acquisition Officer. The writ petitions have since been dismissed and the records returned to the Sub-Collector, Periakulam. He will arrange to pass the awards soon.